செ.வெ.எண் 13 நாள்: 06.05.2017

## பத்திரிக்கை செய்தி

அரசு ஆணை (நிலை) எண் 173 தொழில் துறை நாள்: 17.09.2013-ன்படி திருநெல்வேலி மாவட்டத்தில் கார்னட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான் மற்றும் சில தாது மணல் கனிமங்களை எடுப்பதற்கான சுரங்க பணிகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளதுடன் தாது மணல் கனிமங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்கும் தடை விதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதே நிலை நீடித்து வருகிறது.

2) திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து சுரங்க குத்தகைதாரர்களின் தாது மணல் ஆலைகளில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள தாது மணல் கனிமங்கள் அனைத்தும் சட்ட விரோதமாக சுரங்க பணி செய்து, உரிய அனுமதி சீட்டு இல்லாமல் எடுத்து சென்று, இருப்பில் வைத்துள்ளது மாவட்ட நிர்வாகத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

3) இதற்கிடையில், சட்ட விரோதமாக தாது மணல் கனிமங்கள் எடுத்து செல்வதை தடுக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது நல வழக்கு எண் 1592/2015-ல் 11.01.2017 அன்று தலைமை நீதிபதி அடங்கிய முதன்மை அமர்வு பிறப்பித்த தீர்ப்பில் தாது மணல் கனிமங்களை சட்ட விரோதமாக எடுப்பதை தடுப்பதற்காக கடலோர ரோந்து பணி மேற்கொள்வதுடன் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தாது மணல் ஆலைகள், தாது மணல் இருப்பு கிடங்குகள் மற்றும் பிற இடங்களில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வகை தாது மணல் கனிமங்களையும் அளவீடு செய்வதற்கு அரசு செயலாளர் தலைமையில் சிறப்பு குழு அமைப்பது குறித்து மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து யுக்தி காண வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

4) நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, சிறப்பு குழுவின் தலைவராக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சத்தியபிரதா சாகு, இ.ஆ.ப., அவர்களை நியமித்து அரசு ஆணை (நிலை) எண் 41, தொழில் துறை 7.4.2017-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

5) திருநெல்வேலி மாவட்டத்தில் தாது மணல் ஆலைகள், தாது மணல் இருப்பு கிடங்குகள் மற்றும் பிற இடங்களில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வகை தாது மணல் கனிமங்களையும் சிறப்பு குழுவின் மூலம் அளவீடு செய்வதற்கு 13.05.2017 அன்று சிறப்புக் குழுவின் தலைவர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை புரிய உள்ளார்கள். எனவே, அனுமதி ஏதும் பெறாமல் குத்தகை உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக இயங்கி வரும் தாதுமணல் ஆலைகள், மற்றும் அது தொடர்பான எந்த விதமான தகவல்கள் இருப்பின், இது குறித்த தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தபால் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் (minetnv@gmail.com) வாயிலாகவோ உடனடியாக தெரிவிக்கலாம் எனவும், அந்த தகவல்கள் சிறப்புக் குழுவின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்)
**மாவட்ட ஆட்சியர்,**
**திருநெல்வேலி**